*சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்*

*வாரந்த பாடசாலை*

பாடம் - சித்திரக்கலை வாரம் - 02

தரம் - 08

சுட்டெடன்:- perepered by – Embilipitiya Edu-Zone

- இந்து கலைகளின் ஆசனம், ஆசன முறைகள்.
  சிலை வீற்றிருக்கும் பீடம் ஆசனம் எனப்படும்.
  பத்மம், பத்திரம் எனும் ஆசனங்கள் இந்து சிற்பங்களில் அதிகளவு காணப்படும் ஆசன வகைகள் ஆகும்.

  1. பத்மாசனம் என்பது - தாமரை மலரினால் அலங்கரிக்கப்பட்ட நீள் பட்ட வடிவமுடையது.

  2. பத்ராசனம் என்பது - இது செவ்வக வடிவமுடையது.

- ஆசன முறைகள்
  கால்கள் அமைந்திருக்கும் ஒழுங்கே ஆசன முறையாகும். இந்து சிற்பங்களில் அதிகமாகக் காணப்படும் ஆசனமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. லலிதாசனம் - பீடத்தின் மீது அமர்ந்து இருக்கும் நிலையைக் குறிக்கும். ஒரு பாதம் மடிக்கப்பட்டு மற்றைய பாதம் கீழே தொங்கவிடப்பட்ட நிலை. (பார்வதி, சரஸ்வதி) இம்முறையில் அமர்ந்து இருப்பர்.

2. இராஜலீலாசனம் - இடக்கால் கிடையாக மடிக்கப்பட்டு வலக்கால் செங்குத்தான நிலையில் மடிக்கப்பட்டு, அதன் மீது வலக்கையின் முழங்கை வலக்காலை ஸ்பரிஷம் செய்யும் முறை இதனைக் குறிக்கும்.

3. பரியங்க ஆசனம் - கதிரை ஒன்றில் அமர்ந்து இருக்கும் நிலையைக் குறிப்பதுடன் பாதங்கள் மடித்து கீழே ஸ்பரிஷம் செய்யும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

<u>விடை தருக.</u>

1. ஆசனம் என்றால் என்ன?
2. இந்து மத சிலைகளில் காணப்படும் ஆசனம் இரண்டின் பெயரை குறிப்பிடுக.
3. பத்மாசனம் என்றால் என்ன?
4. பத்ராசனம் என்றால் என்ன?
5. ஆசன முறை என்றால் என்ன?
6. இந்து மாத சிலைகளில் காணப்படும் ஆசன முறைகள் மூன்றின் பெயரைக் குறிப்பிடுக.
7. லலிதாசனம் என்றால் என்ன?
8. இராஜலீலாசனம் என்றால் என்ன?
9. பரியங்க ஆசனம் என்றால் என்ன?
10. லலிதாசனத்தில் காணப்படும் இந்து சிலைகள் இரண்டின் பெயரைக் குறிப்பிடுக.